மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக் லிட், திண்டுக்கல்
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்
முள்ளிப்பாடி, தாமரைப்பாடி அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்.

ந.க. எண்: 201/2010/சி.வி.-3 நாள் 05.07.2010

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) சார்பில் நடத்தப்படும் மதுபானக் கடையைச் சார்ந்த மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பனை செய்வதற்கும் மற்றும் மதுக்கூடத்தில் சேகரம் செய்யப்படும் அனைத்து காலி மதுபாட்டில்களையும் அவர்களே எடுத்து விற்பனை செய்து கொள்ளவும், ஒட்டு மொத்த அனுமதி வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது. மதுக்கூடத்தின் கட்டிட வாடகை மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றை மதுக்கூடம் நடத்துபவரே ஏற்க வேண்டும்.

ஒவ்வொரு டாஸ்மாக் மதுக்கூடத்திற்கும் ஏல குறுமத் தொகை(upset price) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் திண்டுக்கல் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஏலம் கோருபவர் குறுமத் தொகைக்கு மேற்பட்டு டெண்டர் படிவத்தில் குறிப்பிடவேண்டும். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 164 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு 08.07.2010 முதல் 22.7.2010 மாலை 4.00மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. **இதில் தேர்வு செய்யப்பட்டவர்கள் நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை மாதாந்திர உரிமத்தொகையாக செலுத்தப்பட வேண்டும்.** உள் வாடகைக்கு(sub-lease) விட அனுமதிக்கப்படமாட்டாது.

டெண்டர் படிவம், டெண்டர் நிபந்தனைகள் விபரம் போன்ற ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை திண்டுக்கல் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் **08.07.10 காலை 11.00 மணி முதல் 22.07.10 பிற்பகல் 3.00 மணி வரை** ஒப்பந்தப்புள்ளி ஆவணம் 1க்கு ரூ.520.00 (ரூபாய் ஐநூற்றி இருபது மட்டும்) (விற்பனை வரி உட்பட) வரைவோலையாக மாவட்ட மேலாளர் டாஸ்மாக், திண்டுக்கல் என்ற பெயரில் திண்டுக்கல்லில் மாற்றத்தக்கக் கூடிய வகையில் செலுத்தி ஒப்பந்தபுள்ளி ஆவணங்களை அலுவலக வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சலக காலதாமதங்களுக்கு தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம் பொறுப்பல்ல.

பிணை வைப்புத்தொகையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திண்டுக்கல் (District Manager, Tasmac, Dindigul) என்ற பெயரில் திண்டுக்கல்லில் காசாக்கதக்க (Payable at Dindigul) வகையில் வங்கி வரைவோலையை கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| நகராட்சிகள் | :- | ரூ.20000.00 |
| பிற இடங்கள | :- | ரூ. 5000.00 |

மேற்படி வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். பிணை வைப்பு தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனையில் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

22.07.10 **அன்று மாலை 4.00 மணி வரை** தான் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு (அஞ்சலக தாமதம் உட்பட) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளித்த விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திண்டுக்கல் அவர்களால், அவர்களது அலுவலகத்தில், **23.07.10 காலை 11.00 மணிக்கு** திறந்து பரிசீலனை செய்யப்படும்.

**தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இரண்டு மாதங்களுக்கான உரிமத் தொகையினை காப்பு தொகையாகவும், மற்றும் நடப்பு ஒரு மாத உரிமத் தொகையை முன் வைப்புத்தொகையாகவும், 26.07.10-க்குள் ஒவ்வொரு மதுபானக் கடைக்கும் தனித்தனியே செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்தக்காரர்கள் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகை டாஸ்மாக் நிறுவனத்தால் பறிமுதல் செய்யப்படும்.**

இணைய தள முகவரி
www.dindigul.tn.nic.in

(இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நடவடிக்கையை தள்ளிப்போடவோ, ரத்து செய்யவோ, ஒப்பந்தத்தில் மாறுதல் செய்யவோ திண்டுக்கல் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு முழுஉரிமை உண்டு. அதேபோன்று எந்த ஒரு ஒப்பந்த புள்ளியினையும், எவ்வித காரணமும் கூறாமல் தள்ளுபடி செய்வதற்கும் ஏற்பதற்கும் முழு உரிமை உண்டு)

மாவட்ட மேலாளர்
டாஸ்மாக் லிட் திண்டுக்கல்.